Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 258/2020 PW-4**

Name : புரட்சிக்கண்ணன்
Father / Husband name : எல்லப்பன்
Village : ரோசனை
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.08.2025

A1, A2 present. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரோசனையில் ஆக்டிங் டிரைவராக வேலை செய்கிறேன். சாட்சி அருண்ராஜ் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2019 ம் ஆண்டு ஒருநாள் காலை சுமார் 11, 12 மணியளவில் நான் ரோசனை காவல் நிலையத்திற்கு சவாரி சென்றபோது அங்கு போலிசார் கேட்டுக்கொண்டதால் விபத்து வழக்கு சம்மந்தமாக வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 28.05.2019 அன்று காலை 11 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த அருண்ராஜ் என்பவரும் திண்டிவனம் அரசு மருத்துவனை அவசர சிகிச்சைப்பிரிவு நுழைவு வாயிலில் நான் சொந்த வேலை சம்மந்தமாக

நின்றிருந்தபோது ரோசனை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாரர் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் அருண்ராஜ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.I, Tindivanam